
ச.எண் : 10/1B
ச.எண் : 9
ச.எண் : 8
ச.எண் : 10/1A
ச.எண் : 23
ச.எண் : 5
15.00 மீ அகல நிலையிலுள்ள பஞ்சாயத்து சாலை
12.00 மீ அகல மனைப்பிரிவு சாலை
10.00 மீ அகல மனைப்பிரிவு சாலை
9.00 மீ அகல மனைப்பிரிவு சாலை
7.20 மீ அகல மனைப்பிரிவு சாலை
பூங்கா
To கூடச்சேரி
To வசந்தபுரம்
148.20
220.80

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல்

பரமத்தி ஊராட்சி ஒன்றியம்

நாமக்கல் மாவட்டம் பரமத்தி-வேலூர் வட்டம் கூடச்சேரி ஊராட்சி/கிராமம், சர்வே எண் 10/1A ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு	1:800 (அ) 1"=66'0"
இணையதள எண்	NKL/55Y4VJNT/16698/2023

குறிப்பு :

1. மனைப்பிரிவின் மொத்தபரப்பு	9.86 ஏக்கர் (அ) 39861.20 சதுர மீட்டர்	
2. சாலையின் மொத்த பரப்பு	10388.50 ச.மீ	
3. மொத்த மனைகள்	166	▭
4. ஒதுக்கிய மனைகள்	166	🟥
5. மனைப்பிரிவின் எல்லை	________	🟨
6. உத்தேச சாலை	________	
7. நிலையிலுள்ள சாலை	________	

II.பொது ஒதுக்கீடுகள் :

உத்தேச சாலை பரப்பளவு நிகர பிரதானமான பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது

(அ) சாலையின் மொத்த பரப்பு (மூலை முறிவு உட்பட) உட்பட	10388.60 ச.மீ	🟥
(ஆ) பூங்காவிற்கான பரப்பளவு	2947.26 ச.மீ (10.13%)	▭

8. பொது உபயோகம் (TNCDBR 47(6))-ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்ட 1% ஒதுக்கீடு

(அ) உள்ளாட்சிக்கான பொது ஒதுக்கீட்டின் பரப்பளவு	= 150.67 ச.மீ (0.51%)	🟦
(ஆ) TANGEDCO-க்கான ஒதுக்கீட்டின் பரப்பளவு	= 149.55 ச.மீ (0.50%)	🟩

9. விற்பனைக்குரியவை

(அ) EWS மனை எண்கள் = 2992.79 ச.மீ (10.13%)

(ஆ) EWS மனை எண்கள்
மனைகள் 95 மற்றும் 106 வரை
மனைகள் 109 முதல் 118 வரை
மனைகள் 128 முதல் 139 வரை
மனைகள் 141 முதல் 148 வரை
மனைகள் 158 முதல் 166 வரை

மூலை முறிவு — 12மீ அகல சாலை வரை 1.50mX1.50m

நிபந்தனைகள் :

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இந்நிலம் எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் எந்த துறைக்கேனும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.

2. அரசாணை எண்.181 ஊரக வளர்ச்சித்துறை நாள் 19.12.2020-ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரி முழு திருப்தியில் உள்ளது எனச் சான்றளித்துள்ளதன் பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்படும் பட்சத்தில், மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குனர்/ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5. நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் விற்பனைப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வசம் உரிமை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு தளப்பகுதியில் பெரிய அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

7. உத்தேச மனைப்பிரிவு அமையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கதல்ல.

8. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.

9. உத்தேச மனைப்பிரிவின் ஊடே POWER LINE, HT LINE, LT LINE, AND TELEPHONE LINE ஆகியன செல்லுமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

10. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.

11. உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

12. உத்தரவு கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் ம மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.

13. அரசாணை எண்.18 ம 16 நதி ம குழுமம் நாள் 04.02.2019 ம 31.01.2020-ன் விதிகள் அனைத்தும் பொருந்தும்.

14. குறைந்த வருவாய் பிரிவினருக்கான EWS மனை எண்கள் 95-106, 109-118, 128-139, 141-148, 158-166 வரையிலான மனைகளை மனை உட்பிரிவு/ மனை ஒருங்கிணைப்பு/ மனை உயர்வாக மாற்றம் செய்யக் கூடாது. மேலும் 10.00மீ அகல சாலையில் அமையும் EWS மனைகளுக்கு கட்டிட வரம்பு 1.0மீ பொருந்தும்.

Approval No: SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO. 395/2023

E.Sign__________

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்

Signature valid Signature valid

தேவசேனா
அளவர்-உதவி வரைவாளர்

ஈ.சேகர்
வரைவாளர் நிலை-II

மு.கேசவேலு
மேற்பார்வையாளர்